# Tamil Murli Quiz 23-08-2015

தமிழ் முரளி வினாடி-வினா
முரளியினை மறுமுறை நினைவுற உதவும் வினாடி-வினா. இன்றைய முரளியிலிருந்தே கேள்விகள் கேட்கப்படும்.
இங்கே கிளிக் செய்க: 20 நிமிட முரளியின் எம்பி3 கோப்புகள் மற்றும் பழைய வினாடி-வினா.abc

**Q.1)** சரியான விடை யை தேர்ந்தெடுக்கவும் :
**இன்றைய நினைவு நாளில் பாப்தாதா குழந்தைகளுக்கு எந்த வரதானத்தை கொடுக்கிறார்?**

A. எப்பொழுதும் நினைவு சொரூபமாக ஆகுக.
B. எப்பொழுதும் சக்திசாலியானவர் ஆகுக
C. எப்பொழுதும் அன்பு சொரூபமாக ஆகுக
D. எப்பொழுதும் மாஸ்டர் சர்வ சக்திமான் ஆகுக

**Q.2)** சரியான 3 (மூன்று) விடைகளைத் தேர்வு செய்யவும்:
**அனைத்து சேவை திட்டங்களும் வெற்றிபெற எந்த மூன்று விஷயங்களில் பொறுப்பாளர் ஆகி இருப்பவர்கள் கவனம் வைக்க வேண்டும் என்று பாபா கூறுகிறார்?**

A. ஆத்மாக்களின் விஷேசத்திற்கு மதிப்புக் கொடுத்து அவர்கள் எதிரில் ஊக்கம் உற்சாகத்தை கொண்டுவருவது
B. அனைவர் மேலும் அன்பு வைத்து அனைத்து ஆத்மாக்களுக்கும் பிரம்ம போஜனம் என்ற பிரசாதத்தை தவறாமல் கொடுப்பது
C. சேவை நிலையங்களின் சூழ்நிலையை ஆன்மீகமாக ஆக்கி அங்கு வரும் ஆத்மாக்களின் முன்னேற்றம் சுலபமாக ஏற்பட வழி செய்வது
D. அனைத்து சேவை நிலையங்களில் அநேகர் இருந்தாலும் ஒற்றுமையை கொண்டுவருவது

**Q.3)** சரியான விடையை தேர்வு செய்யவும்:
**நாளா புறங்களிலும் உள்ள அனைத்து குழந்தைகளின் உள்ளத்திலும் இந்த நினைவு நாளன்று என்ன ஒரே ஒரு திருட சங்கல்பம் வந்ததாக பாபா கூறுகிறார்?**

A. தந்தையை வெளிப்படுத்துவதற்கான எண்ணம்
B. தந்தைக்கு சமமாக ஆவதற்கான எண்ணம்
C. தந்தைக்கு சமமாக சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணம்
D. உலக ஸ்தாபனை காரியத்தில் தந்தைக்கு வலது கரமாக இருக்க வேண்டும் என்ற எண்ணம்

**Q.4)** சரியா? தவறா?:
**எப்படி விநாசம் செய்பவர்கள் பொத்தானை அழுத்துவதற்காக காத்திருக்கிறார்களோ அதேபோல தெய்வீக ஜென்மம் மூலமாக ஸ்தாபனை செய்வதற்காக பொறுப்பாளர் ஆகி இருக்கும் அட்வான்ஸ் பார்ட்டி ஆத்மாக்கள் பிரத்யட்சம் செய்வதற்காக காத்துக்கொண்டிருக்கிறார்கள்.**

A. சரி
B. தவறு

**Q.5)** சரியான விடையை தேர்வு செய்யவும்:
**இந்த வருடத்தில் முக்கியமாக ________________ சமநிலை வையுங்கள் என்று பாப்தாதா கூறினார்.**

A. அதிகாரி மற்றும் பாலகன் என்ற இரண்டிலும்
B. ஞானம் மற்றும் யோகத்தில் சம நிலை
C. மாணவன் மற்றும் ஆசிரியர் என்ற இரண்டிலும்
D. நினைவு மற்றும் சேவையில் சம நிலை

**Q.6)** சரியான விடையை தேர்வு செய்யவும்:
**இந்த வருடத்தில் விசேஷமாக ________________ என்ற நகைகளால் அலங்காரம் செய்யப் பட்டவர்களாக இருங்கள் என்று பாபா கூறினார்**

A. அனைத்து குணங்கள்
B. அஷ்ட சக்திகள்
C. புண்ணகை
D. தூய்மை

*Q.7)* <u>சரியா? தவறா? :</u>
**சாஸ்திரங்களின் சேவையை வெளிப்படை ரூபத்தில் நினைவுச் சின்னமாக வீணை வாசிப்பது போன்றும் , குப்த ரூபத்தில் கங்கை, யமுனை வெளிப்படையாகவும் சரஸ்வதி குப்தமாகவும் இருப்பதுபோல காண்பித்துள்ளார்கள்.**

**A.** ◉ சரி
**B.** ○ தவறு

*Q.8)* <u>சரியான விடையை தேர்வு செய்யவும்:</u>
**இன்றைய நாட்களில் ஸ்தூல நறுமணத்தின் சாதனமாக வித விதமான நறுமணத்தைப் பறப்புகிறார்கள். அதுபோல நீங்கள் எந்த நறுமணத்தைப் பறப்ப வேண்டும் என்று பாபா கூறுகிறார்?**

**A.** ◉ சுகம், சாந்தி, சக்தி, அன்பு, ஆனந்தம்
**B.** ○ சுப பாவனை, சுப காமனை, உயர்ந்த எண்ணம்
**C.** ○ அனைவரும் தந்தைக்கு சமமாக ஆகவேண்டும் என்ற எண்ணம்
**D.** ○ அனைவருடைய துக்கம் நீங்கி எங்கும் சுகம் இருக்கவேண்டும் என்ற எண்ணம்

*Q.9)* <u>சரியான விடை கொண்டு வாக்கியத்தை பூர்த்தி செய்யவும்:</u>
**கடலின் ஆழத்தில் சென்று __________________ என்ற முத்துக்களை அடையக்கூடிய எப்பொழுதும் சக்தி சாலியான ஆத்மா ஆகுக.**

**A.** ○ பிராப்தி
**B.** ◉ அனுபவம்
**C.** ○ உயர்ந்த பதவி
**D.** ○ உலக ராஜ்ய சிம்மாசனம்

*Q.10)* **சரியான விடையை தேர்ந்தெடுக்கவும் :**
**__________________ தான் விகாரம் என்ற பூதங்களை வரவழைக்கிறது . எனவே எண்ணங்களிலும் சுத்தமானவர்கல்லாக ஆகுங்கள்.**

**A.** ○ தேக அபிமானம்
**B.** ○ சுய நலம்
**C.** ◉ அசுத்தம்
**D.** ○ எதிர்மறையான எண்ணங்கள்